OS. 07/2021

நாள். 20.01.2026

**பி.வா.சா.3 – முருகானந்தம், த/பெ.சித்திரைவேலு**

வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-

வாதிகள் என் பெரியப்பா பூச்சியின் மகள்கள் என்றால் சரிதான். என் அப்பா சித்திரவேலுவுடன் பிறந்தவர்கள் பூச்சி மற்றும் இருளன். பூச்சி மற்றும் இருளன் மற்றும் சித்திரவேலு ஆகிய மூவரும் சொத்தை பாகம் செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். தாவா 5ம் இலக்க சொத்து பாகத்தில் பூச்சியின் பாகத்திற்கு ஒதுக்கப்பட்ட சொத்து என்றும், தவறுதலாக பட்டா என் அப்பா பெயரில் ஏற்பட்டது என்றால் சரிதான். தாவா 5ம் இலக்க சொத்துக்கு என் அப்பா பெயரி'ல ஏற்பட்டுள்ள பட்டாவை 1ம் பிரதிவாதி பெயருக்கு மாற்றுவதற்கு எங்களுக்கு ஆட்சேபனை இல்லை என நானும், என் அம்மா மற்றும் சகோதர, சகோதரிகள் ஒருபிரமாண பத்திரம் எழுதிக்கொடுத்தோம் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பிரமாணப்பத்திரத்தில் உள்ள C.முருகானந்தம் என்ற கையெழுத்து என் கையெழுத்து என்றால் சரிதான். தகவல் உரிமை சட்டத்தின் கீழ் பெறப்பட்ட சாட்சி மற்றும் அவரது தாயார், சகோதர, சகோதரிகள் எழுதிக்கொடுத்த சம்மத பிரமாணப்பத்திரத்தின் நகல் **வா.சா.ஆ.13**. பூச்சியின் பாகத்திற்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களை பொறுத்து வாதிகள் மற்றும் 1ம் பிரதிவாதி பாகம் செய்து கொள்வதில் எனக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை.

1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-

என் தகப்பனாருக்கு சர்வே எண்கள். 457/1ஏ 2, 457/1ஏ 5ல் பாகத்தில் ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். சர்வே எண்கள்.457/1ஏ 3 மற்றும் 457/1ஏ 7 இருளம் பாகத்திற்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். என் அப்பாவிற்கும், இருளனுக்கும் தாவா 5ம் இலக்க சொத்தில் எந்த உரிமையும் கிடையாது என்றால் சரிதான். சர்வே எண்.494/2ஏ 2ல் கண்ட சொத்து இருளன் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். சர்வே

எண்.494/2ஏ3ல் கண்ட சொத்து என் தகப்பனார் சித்திரவேலு பாகத்திற்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். 2ம் இலக்க சொத்தான சர்வே எண்.494/2ஏ1ல் என் தகப்பனாருக்கோ, என் பெரியப்பாஇருளனுக்கோ எந்த உரிமையும் இல்லை என்றால் சரிதான். தாவா 1, 3 மற்றும் 4 இலக்க சொத்துக்களுக்கு பட்டா என் தகப்பனார் சித்திரவேலு, பெரியப்ப இருளன், பூச்சி பெயரில் கூட்டுப்பட்டாவாக உள்ளது என்றால் சரிதான். தாவா 1, 3 மற்றும் 4 இலக்க சொத்துக்களை பொறுத்து நாங்கள் பிரித்துக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. பிரித்து தனித்தனியாக அனுபவம் செய்து வருகிறோம். நாங்கள் சொத்துக்களை பிரித்து தனித்தனியாக அனுபவம் செய்து வந்தால் தனிப்பட்டா எங்களுக்குள் ஏற்பட்டிருக்கும் என்றும், இல்லை என்பதால்தான் கூட்டுப்பட்டாவாக இருந்து வருகிறது என்றால் சரியல்ல. 1ம் வாதி ராக்கம்மாளின் கணவர் கருணாநிதி ஓய்வுபெற்ற நீதிமன்ற ஊழியர் என்றால் சரிதான். 1ம் வாதி ராக்கம்மாளும், அவரது கணவர் கருணாநிதியும் சேர்ந்தும், தனித்தனியாகவும் தங்களுக்குள்ள பாகப்பாத்தியத்தை 02.09.1989ம் தேதியில் 1ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் நான் கேள்விப்பட்டேன். 18.10.2005ம் தேதி வாதிகள் இருவரும் சேர்ந்து 1ம் பிரதிவாதிக்கு ஒரு விடுதலைப்பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் கேள்விப்பட்டேன். சர்வே எண். 457/1ஏ4 (5ம் இலக்க சொத்து ) பொறுத்து என் தகப்பனார் 1ம் பிரதிவாதி சுந்தர்ராஜன் பெயருக்கு பட்டா மாற்ற தனக்கு ஆட்சேபனை இல்லை என எழுதிக்கொடுத்துள்ளார் என்றும், வாதிகள் மற்றும் 1ம் வாதியின் கணவர் எழுதிக்கொடுத்த பாக பாத்திய விடுதலை பத்திரத்தின் அடிப்படையில்தான் 1ம் பிரதிவாதிக்கு என் தகப்பனார் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது, என் தகப்பனார் எழுதிக்கொடுத்துவிடுவோம் என்று சொன்னார். என் தகப்பனார் எழுதிக்கொடுத்த விவரத்தை சொன்னாரா என்றால் சொன்னார். 30.10.2012ம் தேதியில் என் தகப்பனார் 1ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த பிறகு அதை ஒப்புக்கொண்டுதான் 10.04.2015ம் தேதி நானும், என் அம்மா, சகோதர சகோதரிகள் பட்டா மாறுதல் செய்வதற்கு 1ம் பிரதிவாதிக்கு சம்மத பிரமாண

பத்திரம் எழுதிக்கொடுத்தோம் என்றால் நாங்கள் பட்டாமாறுதல் செய்வதற்கு ஆட்சேபனை இல்லை என்று எழுதிக்கொடுத்தோம். நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை மற்றும் நிரூபண வாக்குமூலம் 6ம்பிரதிவாதி மகேந்திரனுக்கும் சேர்ந்துதான் தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் சம்மத பிரமாண பத்திரத்தில் உள்ள சி.முருகானந்தம் என்ற கையெழுத்து என் கையெழுத்துதான். அந்த சம்மத பிரமாண பத்திரம் **பி.வா.சா.ஆ.14**. நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரைக்கு மாறாக என் நிருபண வாக்குமூலத்தில சொல்லாத சங்கதிகளை சேர்த்து சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் வாதியும், அவரது கணவரும் சொல்லித்தான் நான் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் வாதிகளுடன்தான் நீதிமன்றத்திற்கு வந்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா 2, 5 சொத்துக்களை பொறுத்து ஏற்கனவே 1ம் பிரதிவாதிக்கு பாகபாத்திய விடுதலை பத்திரம் வாதிகள் எழுதிக்கொடுத்துவிட்டதால், வாதிகளுக்கும், 1ம் பிரதிவாதிக்கும் பாகம் ஏற்படுவதில் எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என சொல்லியுள்ளது தவறு என்றால் தெரியாது. தாவா 2, 5ம் இலக்க சொத்துக்கள் 1ம் பிரதிவாதிக்கு மட்டும் பாத்தியம் என்றால் தெரியாது.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.